


**17. 11. 2025**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சவுதி அரேபியா மெக்காவிலிருந்து மதினாவிற்கு உம்ரா புனித பயணம் மேற்கொண்ட யாத்திரிகர்களின் பேருந்து விபத்துக்குள்ளானதில் 42 இந்தியர்கள் உயிரிழந்தனர்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி, தெலங்கானா முதலமைச்சர் திரு.ரேவந்த் ரெட்டி உள்ளிட்டோர் இத்துயர சம்பவத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

2. தமிழ்நாட்டில் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை சார்பில், மனை விற்பனை ஒழுங்குமுறை புதிய அலுவலக கட்டிடத்தை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

4. தமிழக அரசின் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளால் வடகிழக்கு பருவமழையால் இதுவரை எந்த பாதிப்பும் இல்லை என்று பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.ஆர்.ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

5. செம்பரம்பாக்கம், பூண்டி ஏரிகளிலிருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## இனி விரிவான செய்திகள்

**************

## சவுதி - விபத்து

சவுதி அரேபியா நாட்டின் மெக்காவிலிருந்து மதினாவிற்கு உம்ரா புனித பயணம் மேற்கொண்ட யாத்திரிகர்களின் பேருந்து - முஃபாராஹத் பகுதியில், டீசல் டேங்கர் லாரி மீது மோதிய விபத்தில், 42 பேர் உயிரிழந்தனர்.

45 பேர் பயணித்த இந்த பேருந்து டீசல் லாரிமீது மோதி, தீ உடனடியாக பரவியதால், 42 பேர் உயிரிழந்தனர்.

இதில் 20 பெண்களும், 11 குழந்தைகளும், அடங்குவர்.

இவர்கள் அனைவரும் தெலங்கானா ஹைதராபாத்தை சேர்ந்தவர்கள்.

சம்பவம் நடந்த பகுதிக்கு சவுதி பாதுகாப்பு குழுவினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர்.

இருப்பினும் கொழுந்துவிட்டு எரிந்த தீயால் உயிரிழந்தவர்களின் உடல்கள் அடையாளம் காண முடியாத அளவிற்கு கருகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவிற்கான இந்திய தூதர் நிலைமையை ஆராய்ந்து வருவதோடு தெலங்கானா மாநில அரசுடன் தொடர்பில் இருந்து வருகிறார்.

இந்திய தூதரக அதிகாரிகளும், சவுதி அமைச்சகத்துடன் தொடர் கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் உயிர் தப்பிய ஒருவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தேவையான உதவிகளை வழங்க இந்திய தூதரக அதிகாரிகள் முழுவீச்சில் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி இச்சம்பவத்திற்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

ரியாத்தில் உள்ள இந்திய தூதரகமும், ஜடாவில் உள்ள துணை தூதரகமும் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், இந்த விபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தமது இரங்கலை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

தெலங்கானா முதலமைச்சர் திரு.ரேவந்த் ரெட்டி இந்த சம்பவத்திற்கு தமது ஆழந்த அதிர்ச்சியை தெரிவித்துள்ளார்.

பேருந்து விபத்தில் உயிரிழந்தோர் குறித்த விவரங்களை திரட்ட தலைமை செயலர் மற்றும் காவல்துறை தலைவருக்கு உத்தரவுகளை அவர் பிறப்பித்துள்ளார்.

இதனிடையே ஹைதராபாத் தலைமை செயலகத்தில் சிறப்பு கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் உள்ள தெலங்கானா பவனிலும் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது.

மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர்,

சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான அமைச்சர் திரு.கிரண் ரஜிஜூ

தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோரும் இச்சம்வத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

**************

ஹர்தீப்சிங் பூரி

நாட்டின் பொதுத்துறை நிறுவனங்கள் அமெரிக்காவிலிருந்து திரவ பெட்ரோலியம் எரிவாயு, இறக்குமதி செய்வதற்கான ஓராண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன..

இதன்படி ஆண்டொன்றுக்கு 2.2 மில்லியன் டன் LPG அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் என்றும், இது குறைந்த விலையில் நாட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு.ஹர்தீப்சிங்பூரி தமது சமூகவலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாட்டின் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் மக்களுக்கு மிக குறைந்த விலையிலேயே திரவ பெட்ரோல் எரிவாயுவை வழங்கி வருவதாக அவர் கூறினார்.

உலக அளவில் சென்ற ஆண்டு LPG விலை 60 சதவிகிதம் அதிகரித்தபோதிலும், பிரதமரின் சமையல் எரிவாயு திட்ட பயனாளிகளுக்கு 500 முதல் 550 ரூபாய் விலையிலேயே LPG சிலிண்டர் வழங்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

ஒரு சிலிண்டரின் விலை ஆயிரத்து 100 ரூபாயாக உள்ள நிலையில், கூடுதலான 40 ஆயிரம் கோடி ரூபாய் செலவை மத்திய அரசே ஏற்றுக்கொண்டதாகவும் அவர் எடுததுரைத்தார்.

சர்வதேச அளவில் LPG விலை அதிகரிப்பதால் ஏற்படும் சுமை நம் நாட்டின் பெண்களை பாதிக்க கூடாது என்ற பிரதமரின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக திரு.ஹர்தீப்சிங் குறிப்பிட்டார்.

**************

உபேந்திரா திவேதி

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாத நடவடிக்கைகள் பெருமளவு குறைந்திருப்பதாக ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திரா திவேதி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பாதுகாப்பு சார்ந்த கலந்துரையாடலில் இன்று உரையாற்றிய அவர், இந்தாண்டு இதுவரை 31 தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், இதில் 61 சதவிகிதம் பேர் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

எவ்வித போர்முறையாக இருந்தாலும், அதனை எதிர்கொள்ள இந்தியா தயாராக இருப்பதாக கூறிய அவர், தீவிரவாதத்தை ஊக்குவிப்பவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றார்.

ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் நடவடிக்கைகள் ஒரு முன்னோட்டம் மட்டுமே என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தீவிரவாத நடவடிக்கைகளை அண்டை நாடு நம் நாட்டின்மீது மேற்கொண்டால் தக்கபாடம் புகட்டப்படும் என்று எச்சரித்தார்.

தீவிரவாத ஊக்குவிப்பு நடவடிக்கையால் நம் நாட்டின் வளர்ச்சியும், மேம்பாடும் தடைபடுவதாக அவர் கூறினார்.

இந்திய ராணுவத்தின் பிரதான சர்வதேச கருத்தரங்கான பாதுகாப்பு கலந்துரையாடல் புதுதில்லியில் வரும் 27, 28 தேதிகளில் நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாற்றத்திற்கான செயலாக்கம், வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான வலிமை, பாதுகாப்பு என்ற கருப்பொருளுடன் இந்த பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்றும் குறிப்பிட்டார்.

**************

பீஹார்

பீஹாரில் புதிய அரசு வரும் 20ஆம் தேதி பட்னா காந்தி மைதானத்தில் பதவி ஏற்கிறது.

இதற்கான தயாரிப்பு பணிகள் தொடங்கியுள்ளன.

இந்த மைதானம் முழுவதும் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனிடையே நாளை தேசிய ஜனநாயக கூட்டணியின் சட்டப்பேரவை கட்சி கூட்டம் நடைபெறுகிறது.

இதில் திரு.நிதிஷ் குமார் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவார் என தெரிகிறது.

அதன் பின்னரே புதிய அரசு அமைப்பதற்கான உரிமை கோரப்படும்.

**************

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை சார்பில், கட்டடம், மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்திற்கான புதிய அலுவலக கட்டிடத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

சென்னை அண்ணாநகரில் 97 கோடிரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்தை தலைமை செயலகத்திலிருந்து காணொலி வாயிலாக அவர் திறந்துவைத்தார்.

**************

மா.சுப்பிரமணியன்

மழைக் காலங்களில் ஏற்படும் சாதாரண காய்ச்சல் குறித்து மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று மாநில மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தஞ்சை மாவட்டம் தென்னங்குடியில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ், 2 கோடியே 50 லட்சமாவது

மருந்து பெட்டகத்தை பயனாளிக்கு வழங்கிப் பேசிய அவர், அரசின் துரித நடவடிக்கைகளால் காய்ச்சலால் ஏற்படும் உயிரிழப்பு பெருமளவு குறைந்துள்ளதாக கூறினார்.

அரசின் திட்டங்கள் மக்களை சென்றடையும் வரை அரசு அதனை தீவிரமாக கண்காணிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**************

<u>கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்</u>

தமிழக அரசின் சிறப்பான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளால் வடகிழக்கு பருவமழையால் இதுவரை எந்த பாதிப்பும் இல்லை என மாநில பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் பிளவக்கல் பெரியாறு அணையிலிருந்து முதல்போக சாகுபடிக்காக இன்று தண்ணீரை திறந்து வைத்துப் பேசிய அவர், அணைக்கு அருகிலுள்ள பூங்கா சீரமைப்பு பணிகள் முடிவடைந்தவுடன் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்று கூறினார்.

**************

<u>வானிலை</u>

தென்மேற்கு வங்கக்கடல் பகுதயில் நிலவும் காற்றழுத்த தாழ்வு பகுகுதி அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு வடமேற்கு திசையில் நகரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்

.. வாய்ஸ் ..

**************

செம்பரக்கம்பாக்கம்

சென்னையில் கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நருக்கு குடிநீர் வழங்கும் செம்பரம்பாக்கம், பூண்டி ஏரிகளிலிருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து ஆயிரத்து 200 கன அடி உபரிநீர் வெளியேற்றப்படுவதால், கரையோர மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

அதேபோல் பூண்டி சத்தியமூர்த்தி சாகர் நீர்தேக்கத்திலிருந்து மூன்றாயிரம் கன அடி உபரி நீர் கதவணைகள் வழியாக கொசஸ்தலை ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதனால் நம்பாக்கம், கிருஷ்ணாபுரம், வெள்ளியூர், ஆற்றம்பாக்கம், ஒதப்பை, மணலி சடையான்குப்பம் உள்ளிட்ட தாழ்வான பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆற்றின் அருகே சென்று வேடிக்கை பார்ப்பதை தவிர்ப்பதோடு, செல்ஃபி, ரீல்ஸ் பதிவுகள் போன்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் என்றும் ஆட்சித்தலைவர் திரு.பிரதாப் அறிவுறுத்தியுள்ளார்.

**************

ஐயப்ப பக்தர்கள்

கார்த்திகை மாத பிறப்பை ஒட்டி, தமிழகம் முழுவதும் ஐயப்ப பக்தர்கள் தங்களது விரதத்தை தொடங்கியுள்ளனர்.

திருச்சி, அரியலூர், தென்காசி, நெல்லை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் உள்ள கோவில்களில் மாலைஅணிந்து பக்தர்கள் தங்களது விரதத்தை தொடங்கினர்.

முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி கடலில் பக்தர்கள் புனித நீராடி, துளசி மாலை அணிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**************

<u>மயிலாடுதுறை தீர்த்தவாரி</u>

மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காடு ஸ்வேதாரண்யேஸ்வரர் திருக்கோவில் கார்த்திகை மாத பிறப்பை ஒட்டி இன்று சிறப்பு தீர்த்தவாரி நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் தீர்த்த குளங்களில் நீராடி வழிபட்டனர்.

இதனிடையே துலாமாதத்தின் 30 நாட்கள் பலனையும் ஒரேநாளில் பெறும் முடவன் முழுக்கை ஒட்டி காவிரிகரையில் ஏராளமான பக்தர்கள் புனித நீராடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**************

<u>செஸ்</u>

கோவா பனாஜியில் நடைபெறும் உலக கோப்பை செஸ் காலிறுதியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேசி - சீன வீரர் wei Yi-யை இன்று எதிர்கொள்கிறார்.

**************